# தமிழ் இணையக் கல்விக்கழகம்

# சென்னை – 25

## மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை 1 (HG10)

## ஜனவரி–பிப்ரவரி 2026

**நேரம் : 2.30 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

**பிரிவு – 1**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
**Answer all questions in a word / line. (10x1 = 10)**

1. திருவருட்பா என்னும் நூல் எத்தனை பாடல்களைக் கொண்டது?
2. கவிஞர் முடியரசனார் பிறந்த ஊர்?
3. தேசம் என்ற சொல்லின் பொருள் யாது?
4. உலக மக்களுக்குப் பொதுவான நூல்?
5. வருகின்ற பாரதம் பாடலின் ஆசிரியர்?
6. வாழைப்பழத்தைச் சாப்பிட்ட பேரரசரின் பெயர்?
7. இடையின எழுத்துகள் யாவை?
8. முன்னால் இருப்பவரைக் குறிப்பது?
9. நஞ்சு எவ்வளவு தேர்வு எழுதினான்?
10. இராமன் விளைவைக் கண்டறிந்தவர்?

**பிரிவு – 2**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
**Answer any ten questions in three lines each. (10x2=20)**

1. இயேசுவின் திருவடிகள் எப்படிப்பட்டவை?
2. சோழன் கிள்ளியின் களிறு எங்கே கால் வைத்தது?
3. தலைவி, விருந்தினர் சாய்ந்திருக்கத் தந்தது எது?
4. சுரதா என்பதன் விரிவு என்ன?
5. நட்பு எப்பொழுது சிறப்பை இழந்து விடும்?
6. தமிழ் நாட்டின் முக்கனிகள் எனப்படுபவை?
7. தலை வாழை இலை உணவு என்றால் என்ன?
8. கரிகாலன், புலவனுக்கு என்ன என்ன தந்தான்?
9. வேற்றுமை என்பது என்ன?
10. வினையெச்சங்கள் எத்தனை? அவை யாவை?
11. நம்பிக்கை என்ற கவிதையில் செயபாலன் தந்தது என்ன?
12. குளிர்ந்த பொய்கையில் என்னென்ன இருந்ததாக திருநாவுக்கரசர் கூறுகிறார்?
13. மனிதன் எவற்றில் வானளவு உயர வேண்டும்?
14. தமிழ் மொழியில் உள்ள சிறப்பு எழுத்துகள்?

15. உவமையணி என்றால் என்ன?

## பிரிவு – 3

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

**Answer any five questions in six sentences each. (5x4=20)**

1. கல்விச்செல்வத்தின் சிறப்பு, கல்விச்செல்வத்தின் அழகு குறிப்பிடுக.
2. அந்தாதி என்றால் என்ன?
3. வாழைப்பூவின் சிறப்புகள் யாவை?
4. தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் யார் யார் இருந்தனர்? பதினாறுகால் மண்டபத்தைக் காப்பாற்றியவர்கள் யாவர்?
5. பெயர்ச்சொல் வகைகள் யாவை?
6. எந்தெந்த அடிப்படையில் தமிழ் பழமையான சிறந்த மொழி எனலாம்?
7. சொம்பில் தண்ணீர் மொண்டு விருந்தினர்களிடம் கொடுத்த தலைவி கூறியது என்ன?
8. முத்தொள்ளாயிரம் யாருடைய பெருமையைக் கூறுகிறது?

## பிரிவு – 4

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

**Answer any one of the following questions in fifteen sentences. (1x10=10)**

1. "கல்வி கரையில" என்னும் பாடலின் கருத்தைத் தொகுத்து எழுதுக .
2. ஆகுபெயரை விளக்குக.
3. நச்சு உண்ட நாயக மூர்த்தி என்னும் கருத்துகளை உம் பாட வழி விளக்குக.

## பிரிவு – 5

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் பாடலில் இடம்பெற்றக் கருத்துகளை எழுதுக.
2. புணர்ச்சியின் வகைகளை விளக்குக.

.........